**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 13.11.2025

**SC. 32/2023**

எ.சா 1 – **வெங்கடலட்சுமி**

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ம் நாள் **வெங்கடலட்சுமி** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **வெங்கடலட்சுமி** | கணவர் பெயர் | அன்னையப்பா |
| வயது | 65 | கிராமம் | கொனேரிப்பள்ளி |
| வட்டம் | சூளகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**(அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர், எதிரிகள் ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**(Crlmp 3/2025 மனு அனுமதிக்கப்பட்டு , எதிரிகள் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்படுகிறது.)**

**( எ.சா 1 க்கு தமிழ் மொழி சரிவர தெரியாததால் நீதிமன்றத்திற்கு உதவியாக இரு தரப்பு வழக்கறிஞர்கள் சம்மதத்துடன் வழக்கறிஞர். செல்வி . M. துர்கா MS.No. 806/2023 என்பவர் நீதிமன்றத்திற்கு உதவியாக மொழி பெயர்த்து தெரிவித்தார். அவ்வாறே பதிவு செய்யப்பட்டது. )**

**முதல் விசாரணை : –**

1. நான் இந்த வழக்கில் 3 வது எதிரி ஆவேன். எனது அப்பாவிற்கு 5 வாரிசுகள் . அதில் நானும் ஒருவர் ஆகும். எனது தம்பி கிருஷ்ணமூர்த்தி என்பவர் மீது கடந்த 2014 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் OS.No. 261/2014 ஆக நிலுவையில் இருந்து வருகிறது. சர்வே எண் 160/1 ல் உள்ள சொத்தை கிருஷ்ணமூர்த்தி பசவராஜ் என்பவருக்கு விற்பனை செய்து விட்டார். நாங்கள்

சுவாதினத்தில் உள்ளோம் அதை கைப்பற்றவே , இந்த குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கில் சொன்னது போல் சண்டை எதுவும் நடைபெறவில்லை. OS.No. 261/2014 வழக்கின் பிராதின் சான்றிட்ட நகல் **எ.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur